கிராமிய மக்களின் எரியும் பிரச்சினைகள

வான் கதவு திறந்த வெள்ளம் போல சபையிலிருந்து வந்த அதிக பிரச்சினைகளால் கருப்பலகை நிறைந்தது. அதன்பிறகு வாக்கெடுப்பு நேரம் இடம்பெற்றது. வாக்கெடுப்பு நடத்தப்படவிருந்தது நபர்களுக்கல்ல பிரச்சினைகளுக்கேயாகும். வாக்களிக்க வாக்குப் பத்திரத்திற்குப் பதிலாக கிடைத்தது மாயிலங்காகும்.

மின்னேரியாவின் 1¼ மைல்கல் மினிஹிர கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் ஒன்று கூடிய ஊர்மக்கள் சமாதானமாக வாக்களிக்கும் இடத்திற்குச் சென்று தாம் மிகவும் உணரக்கூடிய பிரச்சினையுள்ள சுருள் மாயிலைப் போட்டு வாக்கை அளித்தனர்.

"அவ்விடத்தில் எழுதப்படாத மேலும் பல பிரச்சினைகள் உள்ளன. எமது அபிவிருத்தி வேலைகளுக்கு ஒதுக்கப்படும் ஒரு சிறிய அளவான பணத்தில் வேலைக்காக பயன்படுத்துவது அரைவாசிப் பணமேயாகும். கொந்தராத்திற்கு சமுரத்திச் சங்கம் ஒப்பமிட்டாலும், அதனைச் செய்வது மந்திரியாவார் இல்லையேல் அவரது அடியார் உங்களுக்கு அவை பற்றியும் ஏதாவது செய்யமுடியுமா?

கடந்த காலத்தில் 100 இலட்சம் செலவு செயத்தாகக் கூறி எங்களுக்காக நீர் வழங்கும் திட்டமொன்று தயாரிக்கப்பட்டது. ஒரு கோடி செலவிடப்பட்ட நிலையில் இன்னும் எங்களுக்கு நீர் கிடைக்கவில்லை. இதன் தவறு எங்கு நேர்ந்தது என்று தேடிப்பார்க்க முடியுமா?"

பிரச்சினைகள் முன்வைக்கப்பட்ட பின்பு வாக்குகளை எண்ணும் பணியில் மேலும் மேலும் பிரச்சினைகள்...

மின்னேரியா 1¼ மைல்கல் பிரதேசவாசிகள் அளித்த வாக்குகளில் கூடுதலாக விருப்பு வாக்கை காணி உறுதிப் பிரச்சினைக்கே அளித்திருந்தனர். அது மின்னேரியா விற்கு விசேடமான பிரச்சினையாகும். அதற்கடுத்த கூடுதலான வாக்குகள் குடிநீர்ப்பிரச்சினைக்கே கிடைத்திருந்தது.

உவர்ப்புத் தண்ணீர், தண்ணீர்த் தட்டுப்பாடு, வேளாண்மை வெட்டிய பின்னர் ஓடையை மூடுவதால் கிணறுகளில் நீர் வற்றுகின்றமை போன்ற தண்ணீர்ப் பிரச்சினையில் பக்கங்கள் பல உள்ளன.

அடுத்தபடியான கூடுதல் விருப்பு வாக்கு நெற்செய்கை சம்பந்தப்பட்ட விவசாயப் பிரச்சினைகளுக்கு கிடைத்திருந்தது. இப்பிரச்சினை மிகவும் சிக்கலாக இருந்தது. விவசாயக் கடன், உர மானியம், அனுமதியின்றி விவசாயம் செய்தல், காட்டு யானை அச்சுறுத்தல் போன்ற பல பிரச்சினைகளுடன் கூடியதாக இருந்தது.

1¼ மைல்கல் விவசாயிகள், சிறுகுழந்தைகளைக் கையிலேந்திய தாய்மார்கள், அரச ஊழியர்கள், தொண்டர் நிறுவனச் செயற்பாட்டாளர்கள், பல்வேறு வயதான இளைஞர்கள், வயோதிபர்கள் என கூட்டத்தில் கலந்து கொண்ட ஊர்வாசிகள் முன்வைத்த பல பிரச்சினைகளுள் கல்விப் பிரச்சினை, கசுதாரப் பிரச்சினை, நீர்ப்பாசன மற்றும் போக்குவரத்துப் பிரச்சினை போன்ற மேலும் பல பொதுப் பிரச்சினைகள் முன்வைக்கப்பட்டன.

கடந்த ஜுன், ஜுலை ஆகிய இரு மாதங்களுக்குள் ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நெஷனல் ஸ்ரீ லங்கா நிறுவன ஐரோப்பிய சங்க திட்டம் அநுராதபுரம், பொலன்னறுவை மற்றும் அம்பாறை போன்ற மாவட்டங்களின் ஹொறவப்பொத்தானை, கிழக்கு நுவரகம்பலாத, தமன்கடுவ, ஹிங்குராகொடை, அட்டாளைச்சேனை மற்றும் கல்முனை (தமிழ் மக்கள் வாழும் பகுதிகள்) உள்ளடக்கும் வகையில் இவ்வாறான இலக்குகளைக் கொண்ட குழுக்கள் கலந்துரையாடல 40 அளவில் நடாத்தப்பட்டது. அச்சம்பா' ணைக்காக பலவிதமான சேவைகள் பெறுவோர்..... அளவில் சம்பந்தப்பட்டதோடு அவர்களுக்கு மேலதிகமாக பொதுச் சேவைகள் வழங்கவும் மற்றும் சம்பந்தப்பட்ட பிரதேச சபைகளில் பெரிய, சிறிய அளவிலான அதிகாரிகள், மக்கள் பிரதிநிதிகள், பிரதேச ஊடகவியலாளர்கள், சமூக பிரதான நிறுவனச் செயற்பாட்டாளர்கள் ஆகியோரரச் சந்தித்து அவர்களது அனுபவங்கள் மூலமாக பொதுச் சேவைகளில் உள்ள பிரச்சினைகள் அடையாளம் காணப்பட்டது.

உள்ராட்சிசபை சம்பந்தப்பட்ட, மக்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளை இனம் காணுதல் இத்திட்டத்தின் அடிப்படைக் கட்டமாகும்.

அதன்பின் அதன் இரண்டாவது கட்டமாக சேவை பெறுவோரின் அனுபவத்தை மையமாகக் கொண்டு தெரிவு செய்யப்பட்ட பொதுச் சேவைகள் சிலவற்றின் தரத்தின் மட்டம் மற்றும் அவற்றை மேம்படுத்த வேண்டிய முறை பற்றிய பிரஜைகள் அறிக்கை மூலம் தீர்க்கப்படும். அதன்பிறகு ஆய்வு முடிவின்படி சேவைபெறுவோர் மற்றும் சேவை வழங்குவோர்களுக்காக உரிய கொள்ளளவு வளர்ச்சித் திட்டங்களை அமுல்படுத்த நுரு திட்டம் கருத்துக் கொண்டுள்ளது.

இந்தியாவின் பெங்கலூர் போன்ற நகரங்களில் பொதுச் சேவைகளின் தரத்தை அளவிடு செய்வதற்காக மிகவும் வெற்றிகரமான முறையில் பிரஜைகள் அறிக்கைப் பத்திர ஆய்வு முறையை உபயோகிப்பதோடு இவ் ஆய்வு மூலம் ஏதாவது பொதுச் சேவை ஒன்று நிலைத்து நிற்பது எவ்வாறான மட்டத்தில் என அதாவது, நன்மை பயக்கக்கூடியதென்றால் அது எவ்வாறான மட்டங்களில் நன்மையானது? பலவீனமாயின் அது எவ்வாறான மட்டங்களில் பலவீன-மானது? என்பதனை உறுதி செய்து கொள்வதற்கு கால அவகாசம் கிடைக்கும்.

ஐரோப்பிய சங்க பங்களிப்பின் கீழ் இடம்பெறும் இத்திட்டம் இறுதி இலக்கு நிர்வாகத்திற்காக மக்களின் பங்களிப்பு மற்றும் புரிந்துணர்வைக் கூட்டுவதன்மூலம் கூடிய வகைகூறலுடன் உள்ராட்சி சேவை-களை உருவாக்குவதாகும்.

திட்டத்தின் எதிர்கால நடவடிக்கை பற்றி கருத்துக் கூறும் திட்டப் பணிப்பாளர் சுலக்சனா தி மெல்.

"இத்திட்டத்திற்காக சிங்கள, தமிழ், முஸ்லிம் கலப்புடைய பல தரத்திலான சேவை பெறுவோர் வாழும் பிரிவுகள் தெரிவு செய்யப்பட்டன. எனினும் முதல் கட்டத்தில் கிடைக்கப்பெற்ற அனுபவம் மூலம் சகலரினதும் எரியும் பிரச்சினைகளின் நிலைமை சமனாக இருந்தது. திட்ட ஆரம்பத்தில் அடிமட்டப் பிரச்சினைபற்றி கூடுதலான கவனம் செலுத்தத் திட்டமிடப்பட்டிருந்தபோதிலும் மக்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற மீள்தாக்கத்தின்படி அதனையும்விட அதிக மட்டத்திலான சேவையுடனான பிரச்சினைகள் வரை இத்திட்டத்தினை வியாபிக்க நாம் தீர்மானித்தோம். இத்திட்ட முதல்கட்டத்தில் மக்கள் வாக்குப்பதி அடையாளம் காணப்பட்ட பிரல பிரச்சினைகள் நான்கைத் தெரிவுசெய்து இத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை அமுல்படுத்த நாம் எதிர் பார்க்கின்றோம்."

சமூக விஞ்ஞான ஆராய்ச்சியாளரான கலாநிதி குணவர்தன கமகே அவர்கள் இவ் ஆராய்ச்சியின் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக இருப்பதோடு திட்ட முகாமையாளர் நாதியாபெரேரா உடன் கயான் லியனகே (அநுராதபுரம், பொலன்னறுவை) மற்றும் கௌசான் சிவலிங்கம் (அம்பாறை) திட்டத்தின் இணைப்புப் பணிகளுக்கும் பொறுப்பாகச் செயற்படுகின்றனர்.

தகவல் அறியும் உரிமை பற்றி மக்களை அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டத் தொடர்ச்சி

நாட்டை ஆளும் செயன்முறையில் மக்கள் கலந்துகொள்வதற்கான சந்தர்ப்பத்தை மேலும் அதிகரிப்பதற்காக இலங்கைக்கு தகவல் அறியும் உரிமையைப் பெற்றுக்கொள்வதன் முக்கியத்துவம் பற்றி தொழில்சாரந்தோர், ஊடகவியலாளர்கள் மற்றும் சிவில் சமூகத்தைச் சேர்ந்த பலரையும் அறிவூட்டும் கருத்தரங்குத் திட்டத் தொடர்ச்சி ஒன்று ட்ரான்பேரன்ஸி இன்டர்நெஷனல் ஸ்ரீ லங்கா நிறுவனத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் கீழ் ஜனநாயக வரம்புக்குள் தகவல்களுக்குக் கிடைக்கும் விசேட பலம் ஜனநாயத்தை வலுவூட்டுவதற்காக பிரஜைகள் தகவல் அறியும் உரிமையைப் பாவிக்கக்கூடிய பல சந்தர்ப்பங்கள் பற்றியும் மக்களை அறிவூட்டுவதோடு வேலைக்களம், பயிற்சிப்பட்டறை மற்றும் கலந்துரையாடல்கள் மூலம் இந்நிகழ்ச்சித் திட்டத் தொடர்ச்சி செயற்படுத்தப்படும். இந்நிகழச்சித் தொடரின் கீழ் தகவல் அறியும் உரிமை பற்றி கிராமிய மக்களை அறிவூட்டல் மற்றும் புதிய ஊடகங்களுக்காக அவ்வறிவை உபயோகிப்பது பற்றி ஊவா சனசமூக வானொலியின் ஊடகவியலாளர்களுக்காக திட்டமிடப்பட்ட பயிற்சிக்

கருத்தரங்கொன்று கடந்த ஜுன் 23ம் திகதி பண்டாரவளையில் இடம்பெற்றது.

அக்கருத்தரங்கில் வளவிருத்தியாளர்களாக ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நெஷனல் ஸ்ரீ லங்காவின் பிரதி நிறைவேற்றுப் பணிப்பாளர் ருகவ்ன நாணயக்கார, ஆதரித்து பரந்துரை வழங்கும் பிரிவின் பதில் பணிப்பாளர் தில்ருக்ஷி ஹந்துன்னெத்தி, தொடர்பால் பணிப்பாளர் சான் விதேதுங்க மற்றும் ஊடக அதிகாரி ஆனந்த ஜயகேகர ஆகியோர் கலந்து கொண்டார்கள். ஊவா சமூக வானொலியின் ஊடகவியலாளர்களால் தகவல் அறியும் உரிமை மற்றும் அதனுடன் தொடர்புபட்ட பிரதேசத்திலுள்ள பிரச்சினைகள் அடையாளம் காணப்பட்டு அதுபற்றிய வானொலி நிகழ்ச்சிகள் தயார் செய்யும் முறை பற்றிய கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெற்றது.

இந்நிகழச்சித் திட்டத்தின் மூலம் இலங்கையில் தகவல் அறியும் உரிமையை நிலைநிறுத்துவதற்காக செயற்பாட்டுடன் ஈடுபடும் அறிவுடைய பிரஜைகள் குழுவொன்றை உருவாக்குவதற்கு ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நெஷனல் ஸ்ரீ லங்கா நிறுவனம் எதிர்பார்க்கின்றது.

தோட்டத்துறைப் பாடசாலைக் கல்வி பற்றிய ஆய்வு அறிக்கை வெளியிடப்பட்டது

தோட்டத்துறைப் பாடசாலைக் கல்வியின் தரம் பற்றி ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நெஷனல் ஸ்ரீ லங்கா நிறுவனம் நடாத்திய ஆய்வின் முழு அறிக்கை எதிர்வரும் செப்டம்பர் மாதத்தில் வெளியிடப்படுள்ளது.

தோட்டக் கல்வி நடவடிக்கையுடன் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளைத் தேடிப்பிடிப்பதற்காக இவ் ஆய்வு பதுளை மாவட்டத்தில் பஸறை கல்விப் பிரிவில் 21 பாடசாலைகளில் கருத்துக் கண்டறியப்பட்டன. பதுளை மாவட்ட செயலாளர் கீர்த்தி திசாநாயக்க அவர்களின் அனுமதியுடன் பஸறை வலய கல்வி அலுவலகத்தினதும், பிரதேச செயலாளர் அலுவலகத்தினதும் ஒத்துழைப்புடன் இவ் ஆய்வு நடாத்தப்பட்டது.

தோட்டப் பிள்ளைகள் மாத்திரம் கல்வி கற்கும் பாடசாலைகளின் அடிப்படை வசதிகள், நிர்வாகம், கற்பிக்கும் முறைகள் மற்றும் வளங்கள் பற்றிய இவ் ஆய்வின் மூலம் அனுபவம் கண்டறியப்பட்டதோடு அங்கு அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர் உட்பட 200 இற்கும் மேற்பட்டோரிடம் விபரங்களை திரட்டப்பட்டன. தோட்டத்துறையினுள் நாட்டில் ஏனைய பகுதிகளையும் விட கூடுதல் எண்ணிக்கையில் பிள்ளைகள் பாடசாலையை விட்டுச் செல்வதாக

ஆய்வின்போது கருத்து வெளியானதோடு அதற்குப் பாடசாலைகளில் காணப்படுகின்ற அடிப்படை வசதிகள் போன்றே கல்விமுறை மற்றும் பெற்றோரின் மனப்பாங்கும் காரணம் எனத் தெளிவாகியுள்ளது.

நீர் இல்லாமை, பாடசாலைக் கட்டடங்கள் போதாமை, போக்குவரத்து அசௌகரியம் போன்றவை கல்வி நடவடிக்கைகளுக்கு அதிகபட்ச பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதோடு பயிற்றப்பட்ட ஆசிரியர்களின் குறைபாடும் ஆய்வின்போது அறியப்பட்டது. ஆசிரியர்கள் தகுந்த முறையில் பாடசாலைக்கு வராமை, பதவி பெறும் ஆசிரியர்கள் தற்காலிக இடமாற்றம்பெற்று க'டலில்லாத இடங்களுக்குச் செல்வது மற்றொரு பிரச்சினையாகும்.

அதேபோன்று தோட்டப் பாடசாலைகளுக்குக் கிடைக்கும் பணம் உரிய முறையில் பயன்படுத்தப்படுவது தரக்குறைவான முறையில் உள்ளதும், கல்வியின் தரம் குன்றுவதற்குக் காரணமாயிருந்துள்ளது.

உலக வங்கி உதவியின் கீழ் வுஜஞடு இனால் நடாத்தப்பட்ட இவ் ஆய்வு அறிக்கை மூலம் தோட்டப் பாடசாலைக் கல்வித் தரத்தை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகளும் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

ஆய்வின் பிரதிகள் தேசிய மற்றும் மாகாணக் கல்வி அமைச்சர்களுக்கும், தோட்டப் பகுதியைப் பிரதிநிதித்துவம் செய்யும் அமைச்சர்களுக்கும், கல்வி அதிகாரிகள் மேலும் வேறு சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கும் முன்வைக்கப்பட்டு அப்பிரச்சினைகள் பற்றி பலதுறையினரும் அறிவூட்ட TISL எதிர்பார்க்கின்றது.

நேர்மைத்திறன்

ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா - செய்தியறிக்கை

TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA
Building a Nation of Integrity

28/1, Buller's Lane, Colombo 07
Tel: 0112501474 Fax: 0112592287
tisl@tisrilanka.org www.tisrilanka.org

ஜுலை 2010

சமூக வகைகூறல் சம்பந்தமாக முழு நாட்டிற்குமே முன்மாதிரியான பண்டாரவளை நகர சபை

பொதுசன ஐக்கிய முன்னனியினால் ஆளப்படுகின்ற பண்டாரவளை நகரசபை ஏனைய உள்ராட்சி சபைகளுக்கு முன்மாதிரியாக விளங்கி தமது செயற்பாடு மற்றும் நிதிக் கடமை சம்பந்தமாக எந்தவொரு தகவல்களையும் தேடிப்பார்க்கும் வசதியை மக்களுக்கு வழங்கி சமூக வகைகூறும் தன்மையை உறுதி செய்ய நடவடிக்கை எடுத்துள்ளது.

அதன்படி நகரசபையின் வரவு செலவு அறிக்கை, சபை அறிக்கை, பிரஜைகள் அறிக்கை போன்று நிதி அறிக்கை உட்பட பல அறிக்கைகளையும் நகரசபையின் வரவேற்பு அதிகாரியின் கவுண்டருக்கு அருகாமையில் மக்கள் பார்வைக்கு வைத்துள்ளனர். நகரவாசிகளுக்கு அவ்வறிக்கைகளை பரீட்சிப்பதற்கு மேலதிகமாக அவற்றின் பிரதிகளைப் பெற்றுக்கொள்ளவும் வசதியளிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் சிறந்த நகரசபையாக சில வருடங்களாகப் பாரட்டுப் பெற்ற பண்டாரவளை நகரசபை, சமூக வகைகூறும் தன்மையில் மேலும் ஒருபடி முன் சென்று எதிர்வரும் வரவு செலவைத் தயாரிக்கும் முகமாக மக்களின் யோசனை மற்றும் கருத்துக்களை அறியவும் நடவடிக்கை எடுத்துள்ளது. அதற்கென இதுவரை 20 பிரஜைகள் குழுக்கள் நகரசபை அதிகாரப் பிரதேசம் பூராகவும் நிறுவப்பட்டுள்ளதோடு நகரசபைத் தலைவர் உட்பட அதிகாரிகள் இக்குழுக்களைச் சந்தித்து எதிர்வரும் காலங்களில் அமுல்படுத்த வேண்டிய திட்டங்கள் பற்றி மக்களின் கருத்துக்கள் மற்றும் யோசனை மேலும் உபதேசங்களைப் பெற்றுக்கொள்ளவிருப்பதாக நகர-சபையின் செயலாளர் குணதாச பதிரண அவர்கள் தெரிவித்தார்.

அவ்வாறு பெற்றுக்கொள்ளப்படும் தகவல்களுக்கமைய முன்னுரிமை வழங்கவேண்டிய திட்டங்களை அடையாளம் கண்டு அத்திட்டங்களுக்காக நிதி ஒதுக்குவதாகவும் சம்பந்தப்பட்ட நிதிக் கொடுக்கல் வாங்கல்கள் அனைத்தையும் மக்கள் அறிந்துகொள்வதற்காக வெளியிடப்படுமெனவும் செயலாளர் தெரிவித்தார்.

"நாம் சகல திட்டங்களுக்காகவும் மதிப்பீட்டைத் தயாரித்து அவற்றை மக்களுக்குக் காட்சிக்கு வைப்போம். அவர்களுக்குத் தேவையான பிரதி-களையும் பெற்றுக் கொடுப்போம். உதாரணமாக பாதை அமைப்புத் திட்டம் ஒன்றை எடுத்துக்கொண்டால் அவற்றிற்கு உபயோகிக்கும் தார், கற்களின் கியுப் தொகை, முதலிடும் பணத்தொகை போன்ற சகல தகவல்களையும் மக்கள் அறிந்துகொள்ளலாம்." என திரு. குணதாச தெரிவித்தார்.

..... 2

உள்ளே

2. சட்டதிட்டங்கள் மூலம் உரித்துடைய அதிகாரங்களை பயன்படுத்துவது பொது மக்கள் பொறுப்பு
3. உலகில் வருடாந்தம் இடம்பெறும் சிறு அளவிலான ஊழலின் பெறுமதி
4. சமூக வகைகூறல்
5. கிராமிய மக்களின் எரியும் பிரச்சினைகள்
6. தகவல் அறியும் உரிமை பற்றி மக்களை அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டத் தொடர்ச்சி

சட்டதிட்டங்கள் மூலம் உரித்துடைய அதிகாரங்களை பயன்படுத்துவது பொது மக்கள் பொறுப்பு

உள்ளூராட்சி நிறுவனம் பற்றிய சட்டதிட்டங்களுக்கு அமைய மக்கள் மாநகர சபை, நகர சபை மற்றும் உள்ராட்சி நிறுவனங்களின் கூட்டம் மற்றும் கமிட்டிக் கூட்டங்களில் பங்குபற்றுவதற்கு மாத்திரமல்லாது அக்கூட்டங்களின் அறிக்கைப் பிரதி-களைக் கூட பெற்றுக்கொள்ளும் உரிமை இருந்த போதிலும் அதற்கென ஒருசிலரே

முன்வருகிறார்கள் என உள்ளூராட்சி நிறுவன அதிகா-ரிகள் கூறுகிறார்கள். இந்நிலைக்குப் பிரதான காரணம் சம்பந்தப்பட்ட சட்ட திட்டங்கள் போன்றே சமூக வகைகூறல் பற்றி மக்களுக்கு அறிவின்மையாகும் என பிரதேச சபை மற்றும் நகரசபைகள் பலவற்றினதும் செயலாளர்கள் தெரிவித்தனர்.

மக்களிடையே உள்ள இக்குறைவான அறிவு காரணமாக மாநகரசபை, நகரசபை மேலும் பிரதேசசபைகளினால் தாம் பெற்றுக் கொள்ள இயலுமான சேவைகளை உரிய முறையில் பெற்றுக்கொள்வதற்கு மக்களின் பெரும்பாலானோர் தவறியுள்ளதோடு அதன் காரணமாய் ஒருசில உள்ராட்சி நிறுவனங்களில் ஊழல் மற்றும் மோசடி ஓங்கியுள்ளது என சமூக நடவடிக்கையாளர்களும், கல்வியாளர்களும் தெரிவிக்கின்றனர்.

இது பற்றிக் கருத்துக்கூறிய அப்புத்தளை நகரசபையின் செயலாளர் அமரதாச மனதுங்க அவர்கள் சட்டத்திற்கு அமைய மக்களுக்குப் பெற்றுக் கொடுக்கவேண்டிய தகவல்களை வழங்க தமது நகரசபை தயாராய் இருந்தபோதிலும் அத்தகவல்களைப் பெற்றுக் கொள்ள எவரும் இதுவரை முன்வரவில்லை எனக் கூறினார்.

அறிக்கையொன்றைத் தயாரித்து அதனை மக்களுக்கு வழங்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். எனினும் அது உரியமுறையில் இடம்பெறாததோடு சந்தர்ப்ப வசமாக நகரசபை மற்றும் பிரதேசசபைக-ளின் கமிட்டிகளில் மக்களை சம்மந்தப்படுத்துவதும் இடம்பெறுவதுமில்லை மக்களின் பங்கேற்பு இல்லாமை காரண-மாக உள்ளூராட்சி நிறுவனங்களின் திறமையிலும் தெளிவான ஓர் குறைவு உண்டு அதேபோன்று சபையின் கணக்கு, மதிப்பீடு மற்றும் வரவு செலவு ஏடுகளை மக்களுக்குப் பார்ப்பதற்கு இடமளிக்கவேண்டும் எனவும் சகல கணக்கு வருடத்திலும் ஜனவரி மாதத்தில் அதனை பகிரங்கப்படுத்தவேண்டும் எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

பண்டாரவளை நகரசபையின் செயலாளர் குணதாச எஸ். பதிராஜ அவர்கள் தெரிவித்ததாவது மக்களுக்குத் தேவையான வரவு செலவு உட்பட சகல அறிக்கைகளும் நகரசபை முன் உள்ள காட்சிப்பலகையில் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தாலும் அதனைப் பார்ப்பவர்கள் ஒரு சிலர் மாத்திரமே என்றார். சட்டத்தரணி எஸ்.ஜி. புஞ்சிஹேவா அவர்கள் குறிப்பிட்டபடி மக்கள் மாநகரசை, நகரசை மற்றும் பிரதேசசபைகளின் கூட்டங்களில் பங்கேற்கவும் குழுக் கூட்டங்களின் போது கருத்துத் தெரிவிக்கவும் சட்டத்தில் இடம் உண்டு.

உள்ளூராட்சி நிறுவனத்திற்கு கிடைக்கும் வரவு உரியமுறையில் சேகரித்தல் மற்றும் அப்பணத்தை உபயோகப்படுத்தும் முறை பற்றி மக்களுக்கு அறியத்தரவேண்டியதோடு வருடாந்த முன்னேற்ற

1..... சமூக வகைகூறல் சம்பந்தமாக .....

இதுவரை சம்பந்தப்பட்ட திட்டங்களை அமுல்செய்வதற்காக 200 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், நகரசபையின் எந்தவொரு உறுப்பினருக்கும் இத்திட்டத்தில் ஒப்பந்தங்கள் பொறுப்பேற்க முடியாது எனவும் நகரபிதா திரு. பிரியங்கர குரியகே தெரிவித்தார்.

தமது சபையின் கொந்தராத்து விதிமுறைகளும் மிகவும் வெளிப்படைத் தன்மையுள்ளதாகவே அமுல்படுத்தப்படுவதாகவும் அவற்றைத் திறப்பது சபை அதிகாரிகள் மற்றும் கேள்விப்பத்திரக்காரர்கள் முன்னிலையில் ஆகும் எனக் கூறிய குரியகே எந்தவொரு கேள்விப்பத்திரம் வழங்கலும், உறுப்பினர்களால் மாத்திரம் தனிமையில் நடாத்தப்படுவதில்லை எனவும் குறிப்பிட்டார்.

அதேபோன்று சகல திட்டமும் அதன் இறுதியில் பணம் செலுத்துவதற்கு சம்பந்தப்பட்ட பிரதேச மக்கள் கமிட்டியினால் அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் கூறினார்.

நகரசபைக் கூட்டங்களைப் பார்வையிட மக்கள் வரமுடியும் எனவும் கூட்டங்களின் பின் உறுப்பினர்களைச் சந்தித்து பிரச்சினைகளை முன்வைக்க சந்தர்ப்பம் உள்ளதாகக் கூறிய நகரதலைவர் முறைப்பாடு மற்றும் யோசனைகளைச் சமர்ப்பிக்க விசேட பெட்டியொன்றும் நகரசபையில் உள்ளதாகவும் தெரிவித்தார்.

நகரசபை மூலம் சேமக்காலை சேவையை இலவசமாகப் பெற்றுக்கொள்ள இடவசதி அளிக்கப்பட்டுள்ளதோடு மரணத்தின்போது நீர், டெண்ட், கதிரை மற்றும் ஏனைய தேவைகளும் இலவசமாக வழங்கப்படுகின்றது.

உலகில் வருடாந்தம் இடம்பெறும் சிறு அளவிலான ஊழலின் பெறுமதி

உலகெங்கும் வருடாந்தம் இடம்பெறும் சிறு அளவிலான ஊழலின் பெறுமானம் அமெரிக்க டொலர் 3,000 த்தை (ரூபா முன்று இலட்சம் பில்லியன்) அண்மித்துள்ளதாக சர்வதேச நிறுவனங்களினால் நடாத்தப்பட்ட ஆய்வுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக நேற்காசிய சமூகப் பொறுப்பு பற்றிய ஒன்றிணைப்பு வலைப்பின்னலின் பிரதான நிறைவேற்று அதிகாரி கலாநிதி கோபகுமார் கிருஷ்ணத் தம்பி அவர்கள் தெரிவித்தார் எவ்வாறாயினும் உலகில் வறுமையை ஒழிப்பதற்கு அமெரிக்க டொலர் 600 பில்லியன் அளவே தேவைப்படுவதாக கலாநிதி கோபகுமார் கே. தம்பி தெரிவித்தார்.

மக்களின் அறியாமை மற்றும் சமூக வகைகூறும் கடப்பாடு இல்லாமை இவ்வாறு உலகெங்கும் ஊழல் மோசடிகள் அதிகரிப்பதற்குக் காரணமாயுள்ளதாய் சுட்டிக்காட்டும் அவர் அதற்கு எதிராக செயற்படுவதற்கும் ஒரு நாட்டின் சமூகப் பொறுப்பை மேலோங்கச் செய்வதற்கும் தேவையான கருவிகள் மற்றும் வளங்கள் இருந்த போதிலும் அதுவிடயமாக மக்களின் தூண்டுதல் இல்லாதது பற்றியும் குறிப்பிட்டார்.

ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நெஷனல் ஸ்ரீ லங்கா நிறுவனம் மற்றும் ஆசிய மன்றத்தின் அழைப்பில் இந்நாட்டிற்கு வருகை தந்து சமூக வகைகூறல் மற்றும் தகவல் அறியும் உரிமை பற்றிய ஒரு சில கருத்தரங்குகளில் கலந்துகொண்ட கலாநிதி கோபகுமார் சொற்பொழிவு ஒன்றை நிகழ்த்தி செயலிழந்து நிற்கும் மக்களை மிகவும் செயற்பாடுள்ள பிரஜைகளாக மாற்றுவதன் மூலம் சமூக வகைகூறுவதற்காக அவர்களின் பங்களிப்பை பெற்றுக் கொள்ள முடியுமெனக் கூறினார்.

"பிரஜைகளின் எதிர்பார்ப்புகள் அடிமட்டத்திலேயே உள்ளது. எனவே சமூகத்தைச் சூழ இடம்பெறும் நிகழ்வுகள் பற்றி குறைந்த அவதானமே உள்ளது. அதனால் சிவில் நிறுவனங்கள் ஒன்று சேர்ந்த அவர்களை உற்சாகப்படுத்த வேண்டும். அதே போன்று சமூக வகைகூறல் பற்றிய கருவியை அமுல்படுத்த அவர்களைப் பழக்கவேண்டும்" என திரு. கோபகுமார் தெரிவித்தார்.

"பங்களாதேசில் தகவல் அறியும் உரிமை பற்றிய சட்டம் ஒருசில சட்டம் அமுலாக்கப்பட்டு ஒருசில வருடங்கள் சென்றது ஆயினும் அதற்கென ஒருசில விண்ணப்பங்களே முன்வைக்கப்படுவதாகக் கூறிய அவர் மக்கள் அதுபற்றிய தகவல்களை அறிந்திராமையே அதற்கான காரணம்" என அவர் சுட்டிக்காட்டினார்.

"ஏழை மக்களுக்கு ஒரேயடியாக வசதிகள் கிடைப்பதுமில்லை, உரிய சேவைகள் நிறைவேறுவதுமில்லை என, இந்தியாவின் முன்னாள் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி தெரிவித்தார். அந்நாட்டின் பொது மக்களுக்காக ஒதுக்கப்படும் பணத்தில் அவர்களுக்கு அதில் 15% குறைவான சேவையே இடம்பெறுவதாக கூறினார் அதன் ஒருசில மாதங்களின் முன்பு அவரினது மகன் ராகுல் காந்தி அந்நிலை 5% வீதத்திற்கும் குறைவாகவே இருப்பதாகவும் தெரிவித்தார். அதுதான் யதார்த்தம் எனவே தமது உரிமைகளை வென்றெடுக்க மக்கள் ஒன்று திரள வேண்டும். இந்திய மக்கள் தகவல் அறியும் சட்டம் போன்று ஒன்று திரண்டு அடிப்படை உரிமைகள் பலவற்றை வென்றெடுத்துள்ளனர்" என திரு. கோபகுமார் தெரிவித்தார்.

மாற்றீடுகள், குறைவுகள், வகைகூறல் மற்றும் சேவைகளைப் பெற்றுக் கொள்ளத் தடையாய உள்ளதாயும் வரவு செலவு தயாரிப்பதில் பணம் மிகவும் ஒதுக்கப்படவேண்டிய பிரிவுகளுக்கு பணம் பெற்றுக் கொடுக்கப்படாமை வரவு செலவு தயாரிப்பதில் மக்களின் பங்களிப்பைப் பெறாமை, கண்காணிப்பின் குறைபாடுகள் அந்நிலையை மேலும் தீவிரப்படுத்தக் காரணமாயுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். "இதற்காக மக்களின் குரல் எழுப்பப்பட வேண்டும் அதேபோன்று மக்களை ஒன்று திரட்ட வேண்டும் அதற்கான ஓர் உதாரணம் 'Nine is Mine' என இந்தியாவில் அமுலான மக்கள் குரல் இக்குரல் வரவு செலவு மூலம் சுகாதாரம் மற்றும் கல்விக்காக 9% விகிதாசாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காகும் எனினும் அது வெற்றியடையவில்லை. இப்போராட்டம் மிகவும் பிரபல்ய போராட்டமாகி கவனத்தையும் ஈர்த்தது."

வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறையில் 20,000 தரகர்கள்

அனுமதிப்பத்திரம் பெற்ற மற்றும் அனுமதிப்பத்திரம் பெறாத வெளிநாட்டு வேலை முகவர் நிறுவனங்களுக்காக உறைப்பாளர்களை ஆட்சேர்ப்பதற்கென சுமார் 20,000 தரகர்கள் இருப்பதாக ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நெ'னல் ஸ்ரீ லங்கா நிறுவனம் நடாத்திய ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொழிலுக்காக வெளிநாடு செல்வோர் முகம் கொடுக்கும் ஊழல் அபாயம் பற்றி விசாரணை செய்து இவ் ஆய்வை நடாத்தியுள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்பி